2013 மார்ச் 26]

முற்பகல் 10–50

அதேபோல, ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் தனியார் கட்டடங்களிலே 18 இடங்களிலும், அரசு இடங்களிலே 11 கட்டடங்களிலும் இருந்தவற்றிற்கு மொத்தம் 29 கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

72—

பேருந்து பணிமனை

***21030—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பகுதியில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், வேலூர் மண்டலத்தைச் சேர்ந்த திருப்பத்தூர், ஆம்பூர் மற்றும் கொணவட்டம்–2 ஆகிய பணிமனைகள்மூலம் ஆலங்காயத்திற்கு 6 பேருந்துகள் மட்டுமே முழுமையாகவும், 12 பேருந்துகளும் பல்வேறு இடங்களிலிருந்து குறுநடைகளாகவும் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம், தருமபுரி மண்டலம்மூலம் 4 பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பேருந்துகளுக்காக ஆலங்காயத்தில் தனியாகப் பணிமனை அமைக்க தற்சமயம்

சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களுக்காக திட்டங்களே தவிர, திட்டங்களுக்காக மக்கள் இல்லை' என்ற தெய்வவாக்காக விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையில் சங்கே முழங்கு என்று சரித்திரம் படைக்கின்ற தாயே, காவேரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அரசிதழில் வெளிவரச் செய்து தமிழக விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றிய பொன்னியின் செல்வியே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண மக்களையும் சாமான்ய மக்களாய் மாற்றிப் பார்க்கும் சாதனைத் தாயே, தாய் மண்ணிலிருந்து புறப்பட்ட விதை நன்றி பாராட்ட பூமியின் திசை நோக்கி தலை சாய்ப்பதுபோல, தாயே உங்கள் பொற்பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன் அம்மா.*

வாணியம்பாடி, ஆலங்காயம், ஒடுக்கத்தூர் பேரூராட்சி, ஜவ்வாது மலை ஆகிய பகுதிகளிலேயிருந்து மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஆலங்காயம் பேரூராட்சியிலிருந்து திருப்பத்தூர் பணிமனைக்கு 25 கிலோ மீட்டர் தூரமும், ஆம்பூர் பணிமனைக்கு 35 கிலோ மீட்டர் தூரமும் பேருந்து காலியாகச் செல்வதால் டீசல் விரயமாகிறது. தற்போது மத்திய அரசு நிமிடத்திற்கு நிமிடம் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் இந்தக் காலக்கட்டத்தில், பண விரயத்தை மிச்சப்படுத்தும் விதத்தில் மலைவாழ் மக்கள் நலன் கருதி ஆலங்காயம் பேரூராட்சிப் பகுதியில் அரசுப் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம்*

2013 மார்ச் 26]

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற 8 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், எந்த அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தாக இருந்தாலும்சரி, எந்தப் பணிமனையைச் சேர்ந்த பேருந்தாக இருந்தாலும்சரி, எந்தப் பேருந்தையும் சாலை ஓரத்தில் நிறுத்தக்கூடாது என்று உத்தரவிட்டு, 2 ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தில் 43 புதிய பணிமனைகளைத் தொடங்குவதற்கு உத்தரவிட்டு, இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 43 பணிமனைகளோடு சேர்ந்து இன்னும் பல்வேறு இடங்களிலும், எங்கெல்லாம் பேருந்துகளுக்குண்டான டீசல் செலவினங்கள் அதிகமாககிறதோ அந்த இடங்கள் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, அதைச் குறைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

முந்தைய 5 ஆண்டுகளில் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் 2006–2011 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் புதிதாக 10 பணிமனைகள் மட்டுமே தொடங்கப்பட்டிருக்கின்றன. பணிமனைகள் கூடுதலாக தொடங்கப்பட்டு, பேருந்துகள் சுத்தம் செய்யப்பட்டு, மக்களுக்கு நல்லமுறையில் சேவைகளைச் செய்யவேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, 43 பணிமனைகள் அமைப்பதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த இடத்தில் பேருந்துகள் எண்ணிக்கை, பயணிகளுக்கு சர்வீஸ் வசதி கூடுதலாகத் தேவைப்படுகின்ற பட்சத்தில் அந்த இடத்திலே நிலத்தினைக் கையகப்படுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று பணிமனைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பணிமனை அமைப்பதற்குத் தங்களிடத்திலே ஏற்கெனவே சொல்லியிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. அந்தப் பணிமனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போது கட்டிமுடித்துக் கொடுப்பார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் பணிமனைத் தொடங்க இப்போது திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று, டெண்டர் விடும் பணிகள் முடிக்கப்பட்டு, விரைவில் அந்தப் பணிமனை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***3676—திரு. ஏ.கே.டி. ராஜா:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—